**நெச்சுரல் ரிசோஸ் மெனேஜ்மென்ட் சேர்விஸஸ் (பிறைவேட்) லிமிட்டட் - 2018**

---

## 1. அபிப்பிராயம்

நெச்சுரல் ரிசோஸ் மெனேஜ்மென்ட் சேர்விஸஸ் (பிறைவேட்) லிமிட்டட்டின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.1 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் கம்பனியின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.3 கணக்காய்வு பரப்பெல்லை**

---------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக கம்பனியின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக கம்பனியின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை

வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது கம்பனியின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது கம்பனியின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்,

- கம்பனி தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- கம்பனியின் வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள்

### 1.4.1 அமைப்பின் தொடர்ந்து செல்லும் தன்மை

| கணக்காய்வு பிரச்சினை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2012 இல் கம்பனியை கலைப்பதற்கு மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. ஆனால், கம்பனியின் கலைப்பு ஆரம்பிக்கப்படவில்லை. | கம்பனியின் கலைப்பு தொடர்பான பணிப்பாளர் சபையின் தீர்மானம் இலங்கை மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சின் பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் இலங்கை மஹாவலி அபிவிருத்தி அதிகாரசபைப் பணிப்பாளர்க்கு (வியாபார அபிவிருத்தி) அனுப்பப்பட்டிருக்கின்றது. | பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம், கம்பனி கலைக்கப்படல் வேண்டும். |

**1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1979 இன் 23 ஆம் இலக்க இலங்கை மஹாவலி அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 39(1) ஆம் பிரிவு | வரிசை அமைச்சினால் நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள் மற்றும் பங்குதாரர்களினால் நியமிக்கப்பட்ட பங்கு முதலீட்டுப் பணிப்பாளர்களினை உள்ளடக்கிய 07 உறுப்பினர்களை பணிப்பாளர் சபை கொண்டிருக்க வேண்டிய போதிலும், தற்போதைய பணிப்பாளர் சபையின் நான்கு உறுப்பினர்கள் இலங்கை மஹாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டிருந்தனர். | ஏனைய இரண்டு பங்குதாரர்கள் சமூகமளிக்காமை காரணமாக, பங்குதாரர்களாக கம்பனியின் பொதுக் கூட்டத்தில் இலங்கை மஹாவலி அதிகாரசபை மாத்திரம் பங்குபற்றியிருந்தது. மஹாவலி அதிகாரசபை பணிப்பாளர்களினை நியமிக்க வேண்டும். | 1979 இன் 23 ஆம் இலக்க இலங்கை மஹாவலி அதிகாரசபையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) 5.1.3 ஆம் பந்தி | கம்பனியை தாபிக்கும் நோக்கத்திற்காக எதிர்காலத் திட்டங்களுக்குள் கூட்டிணைந்த திட்டம் கூட்டிணைக்கப்பட்டிருக்க வில்லை. | 2019 ஆம் ஆண்டில் கம்பனியை கலைப்பதற்கு நிர்மாணிக்கப் பட்டதிலிருந்து, கம்பனி எவ்வித கட்டளைகளையும் பொறுப்பேற்றிருக்க வில்லை. ஆகையினால், 2019 ஆம் ஆண்டிற்காக எவ்வித செயல்நடவடிக்கைத் திட்டமும் தேவைப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) 6.5.1 ஆம் பந்தி | 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் வரைபு ஆண்டறிக்கை | ஆண்டறிக்கை 2018 தயாரிக்கப்பட்டு பொதுச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | . | வேண்டும். |
| (இ) | 2015 யூன் 17 ஆந் திகதிய 03 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.2 ஆம் பிரிவு | கம்பனிகளின் வகைகளின் “F” உப வகையின் வரம்பின் கீழ் வருகின்ற அரச உடைமையைக் கொண்டுள்ள கம்பனிகள் தலைவரின் மாதாந்தப் படிகளைச் செலுத்துவதற்கு நிதி அமைச்சின் இணக்கப்பாடு மற்றும் வரிசை அமைச்சு செயலாளரின் பரிந்துரையுடன் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். இருப்பினும், 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்காக தலைவருக்கு செலுத்தப்பட்ட முறையே ரூபா 112,500, ரூபா 450,000, மற்றும் ரூபா 450,000 தொகையான படிகளுக்காக தொடர்புடைய அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை . | “E” குழுக் கம்பனியாக கம்பனியை கருத்திற் கொள்வதன் முதல் இதுவரை தலைவர் படிகள் செலுத்தப்பட்டிருக்கின்றது எவ்வாறாயினும், நிதி அமைச்சின் பீஈடீ 3/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம், விடயத்தை தெளிவுபடுத்துவதற்கு இரண்டு மேலதிக பணிப்பாளர் நாயகங்கள் பெயரிடப் பட்டிருக்கின்றனர். அதை தெளிவுபடுத்துவதற்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்த போதிலும், எவ்வித பதில்களும் பெறப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**02. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 1,267,070 நட்டமொன்றைனக் கொண்ட தொகையாகக் காணப்பட்டதுடன், தொடர்புடைய முன்னைய ஆண்டில் நட்டம் ரூபா 1,266,678 தொகையாகக் காணப்பட்டது. ஆகையினால், நிதி விளைவில் ரூபா 392 தொகையான பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது. கம்பனியின் வியாபாரம் இடைநிறுத்திக் காணப்பட்டமை பற்றாக்குறைக்கான காரணங்களாகக் காணப்படுகின்றது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறமையின்மைகள்

| கணக்காய்வு பிரச்சினை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சுற்றுச்சூழல் அறிக்கைகளினை வழங்குவது கம்பனியின் பிரதான பணியாகக் காணப்படுகின்ற போதிலும், சுற்றுச்சூழல் அறிக்கைகளினை தயாரிப்பதற்கு தொழில்நுட்ப அறிவுடன் கூடிய ஆளணியொன்றை கம்பனி கொண்டிருக்காமையால், சுற்றுச்சூழல் அறிக்கைகள் வெளித்தரப்பினரிடமிருந்து தயாரிக்கப்பட்டு சேகரிக்கப்படுகின்றதுடன் கம்பனி இயலுமையை அல்லது அதன் துல்லியத் தன்மையை மெய்மையாய்வு செய்வதற்கான இயலுமையைக் கொண்டிருக்கவில்லை. 2018 ஆம் ஆண்டிற்காக ஒரு சுற்றுச்சூழல் அறிக்கை மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது. | நிரந்தரமான ஆளணியினரை ஆட்சேர்ப்புச் செய்வதனை விடவும், ஒப்பந்த அடிப்படையொன்றில் தேவைப்படும் ஆளணயினரை வேலைக்கமர்த்துவது கம்பனிக்கு அனுகூடலமாகக் காணப்படுகின்றது. 2012 ஆம் ஆண்டிலிருந்து மூடுவதற்கு கம்பனி தீர்மானித்திருந்தது. அதனைத்தொடர்ந்து கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் மூடுவதற்கு கம்பனி அறிவுறுத்தப்பட்டது. அதற்கமைய, கம்பனியின் பணிப்பாளர் சபை 2019 ஆம் ஆண்டில் எவ்வித செயற்திட்டத்தையும் மேற்கொள்ளாதிருக்க தீர்மானித்திருந்தனர். | கம்பனியின் பிரதான தொழிற்பாடுகளுக்குத் தேவையான ஆளணியினர் ஆட்சேர்ப்புச் செய்யப்படல் வேண்டும். |

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு பிரச்சினை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பனிக்காக குறித்துரைக்கப்பட்ட எவ்வித ஆளணியையும் கொண்டிருக்காது 03 ஆளணி உறுப்பினர்களை கம்பனி கொண்டிருந்ததுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அல்லது பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட எவ்வித ஆட்சேர்ப்பு நடைமுறைகளும் காணப்படவில்லை. அதன் விளைவொன்றாக ஆட்சேர்ப்பின் சரியானதன்மை, பதவியுயர்வுகள், பதவி தகைமைகள் மற்றும் கம்பனியின் ஆளணியினர்க்கான சம்பள தீர்மானங்களை பரீட்சிப்பதற்கு | கம்பனிக்காக ஆட்சேர்ப்புத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கின்றது. கம்பனியின் உறுதி அற்ற தன்மை காரணமாக, 2012 ஆம் ஆண்டிலிருந்து எவ்வித நிரந்தமான உத்தியோகத்தர்களும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | விரைவாக கலைப்பு செயன்முறையை பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

சாத்தியமானதாகக்
காணப்படவில்லை.